**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – அறிவிப்புகள் – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் பயனடையும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2025–26–ஆம் நிதி ஆண்டில் விரிவுபடுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண். 71 நாள் 27.06.2025

திருவள்ளுவர் ஆண்டு 2056

விசுவாவசு, ஆனி 13

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 27.07.2022.
2. அரசாணை (நிலை) எண்.1, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 13.01.2023.
3. அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 07.06.2023.
4. அரசாணை (நிலை) எண்.17, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 11.03.2024.
5. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 14.03.2025.
6. சமூக நல ஆணையரின் கடித ந.க. எண்.775935/ச.உ.தி–2(1)/2025, நாள் 07.04.2025.
7. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.849691/ச.உ.தி–2/2(1)/2025, நாள் 26.05.2025.
8. அரசாணை (நிலை) எண்.58, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 29.05.2025.

------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை) பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை உணவு வழங்கிடும் பொருட்டு, முதற்கட்டமாக முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தி ஆணையிடப்பட்டது.

2. பின்னர், மேலே இரண்டு முதல் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், தமிழ்நாட்டில் நகர்புறப் பகுதிகள் (மாநகராட்சி/நகராட்சி/

(த.பி.பா)

பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்தி ஆணையிடப்பட்டது.

3. மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள், 2025–2026–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிறவற்றினிடையே, பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்: –

> **"தமிழ்நாட்டின் நகரப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 3.14 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் ரூ.600.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. "**

4. மேலே ஆறு மற்றும் ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாட்டில் காலை உணவுத் திட்ட செயலாக்கத்தினால் ஏற்பட்டுள்ள நேர்மறை தாக்கங்களை ஆய்வுகள் மூலம் கண்டறிந்ததைக் கருத்தில் கொண்டு, பள்ளி கல்வித் துறையிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் செயல்படும் 2,429 அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 3,06,916 மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையிலும், மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் அறிப்பினை செயல்படுத்தும் பொருட்டும், ஏற்கனவே நடைமுறையிலுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் 2429 அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2025–2026–ஆம் நிதியாண்டில் விரிவாக்கம் செய்திட உரிய ஆணை வழங்குமாறும், இதன் பொருட்டு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.87.60 கோடியை (தொடர் செலவினம் ரூ.85.82 கோடி / தொடரா செலவினம் ரூ.1.78 கோடி) ஒப்பளிப்பு செய்யுமாறும் சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்த வேண்டி, சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5–ம் வகுப்பு வரை), 2025–2026–ஆம் ஆண்டில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை விரிவுப்படுத்தி பின்வரும் ஆணைகளை அரசு வெளியிடுகிறது: –

i. தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் 2429 தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 3,06,916 மாணவ மாணவியர் பயனடையும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2025–2026–ஆம் நிதி ஆண்டில் விரிவுபடுத்தப்படுகிறது.

ii. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இயங்கும் மாநகராட்சி, நகராட்சி அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மூலமாகவும் பெருநகர சென்னை மாநகராட்சியில் இயங்கும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில், ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும், ஒருங்கிணைந்த சமையல் கூடங்களில் காலை உணவினை தயாரித்து இணைப்பு மையங்களுக்கு வழங்கிட வேண்டும்.

iii. மாநகராட்சி / நகராட்சி பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சி பகுதிகளில் இயங்கும் பள்ளிகளை பொருத்தவரை, உணவு சமைத்தல் பணி, நகராட்சி நிர்வாகத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட ஒருங்கிணைந்த மையங்கள் மூலமாகவும், உணவு பரிமாறுதல் பணிகள், பேரூராட்சி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள் மூலமாக மேற்கொள்ளவும், பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலமாக அந்தந்தப் பள்ளியிலேயே காலை உணவு தயாரித்து வழங்கப்பட வேண்டும்.

iv. இத்திட்டத்தில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள காலை உணவு வகைகள் மற்றும் மேலே எட்டாவதாகப் படிப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட உணவு வகை மற்றும் பொதுவான வழிகாட்டுமுறைகள், நகர்ப்புற பகுதிகளில் இயங்கும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும் எனவும், கண்காணிப்புக் குழுக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் இயங்கும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளையும் கண்காணித்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

v. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை, 2025–2026–ஆம் நிதி ஆண்டில் விரிவுபடுத்திட இணைப்பில் கண்டவாறு தொடர் மற்றும் தொடரா செலவினமாக ரூ.87,59,55,894/– (ரூபாய் எண்பத்தேழு கோடியே, ஐம்பத்தொன்பது இலட்சத்து, ஐம்பத்தைந்தாயிரத்து, எண்ணூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5 (v)–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

<u>தொடர் செலவினம்</u>

| | | |
|---|---|---|
| 1. | <u>பொதுப் பிரிவு</u><br>2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 – மதிய உணவு மாநிலச் செலவினங்கள் – BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>IFHRMS (த.தொ.கு: 2236 02 102 BG 30903 | ரூ.68,65,58,815/– |

| | | |
|---|---|---|
| 2 | <u>சிறப்புத் திட்டம்</u><br>2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 789 – ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JS ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டத்தின்கீழ் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>IFHRMS (த.தொ. கு: 2236 02 789 JS 30903 | ரூ.16,30,57,719/– |
| 3 | <u>பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்</u><br>2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநில செலவினங்கள் – JM பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின்கீழ் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>IFHRMS (த.தொ.கு: 2236 02 796 JM 30903 | ரூ,85,81,985/– |
| | மொத்தம் | ரூ.85,81,98,519/– |

<u>தொடரா செலவினம்</u>

| | | |
|---|---|---|
| 1. | <u>பொதுப் பிரிவு</u><br>2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 – மதிய உணவு மாநிலச் செலவினங்கள் – BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>IFHRMS (த.தொ. கு: 2236 02 102 BG 30903 | ரூ.1,77,57,375/– |
| | மொத்த செலவினம் | ரூ.87,59,55,894/– |

7. இவ்வாணை, நிதித் துறையின் மின் அலுவலக எண்.10070967/நிதி (சந)/2025, நாள் 27.06.2025–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை, சென்னை–28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II), சென்னை–18.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச் சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (ச.ந.)த்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/6/2025

பிரிவு அலுவலர்

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.71, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 27.06.2025.**

**தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் / மையங்களின் எண்ணிக்கை மற்றும் நிதி தொகுப்பு விவரங்கள்**

| வ. எண் | திட்டத்தினை செயல்படுத்தும் முகமை துறை – அலுவலர் | பள்ளிகள் / மையங்களின் எண்ணிக்கை | பயன்பெறும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவ/ மாணவியருக்கு நாளொன்றுக்கு ரூ.12.71 என்ற விகிதத்தில் (ஓராண்டிற்கு) 220 வேலை நாட்களுக்கு ஏற்படும் தொடர் செலவினத் தொகை ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் | 259 | 30,020 | 8,39,41,924 | 0 |
| 2. | நகராட்சி நிர்வாக இயக்குநர் | 1,488 | 2,14,121 | 59,87,25,140 | 0 |
| 3. | மேலாண்மை இயக்குநர், மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 682 | 62,775 | 17,55,31,455 | 0 |
| 4. | சமையல் உபகரணங்கள், மற்றும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க ஏற்படும் செலவினம் | – | – | – | 1,70,14,475 |
| 5. | பதிவேடுகள் (2429 x 100) | – | – | – | 2,42,900 |
| 6. | நிர்வாக மற்றும் மதிப்பீடு செலவினம் | – | – | – | 5,00,000 |
| | மொத்தம் | 2,429 | 3,06,916 | 85,81,98,519 | 1,77,57,375 |
| | தொடர் மற்றும் தொடரா செலவினம் = ரூ.87,59,55,894/– | | | | |

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

ஜெ.எ.பிரிஷ்வின் ஏஞ்சலி 27/6/2025

பிரிவு அலுவலர்.

27/6/25